மோட்டார் வாகனக் காப்புறுதி தொடர்பில் விழிப்புணர்வூட்டும் பயிற்சிப்பட்டறை

2025 ஒக்டோபர் 22

மோட்டார் வாகனக் காப்புறுதி

Motor Insurance

பரிபூரண மோட்டார் வாகன காப்புறுதி ஒன்றினூடாக உங்களின் பெறுமதி வாய்ந்த வாகனத்துக்கு திடீர் விபத்து, தீ, வெள்ளம் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் மற்றும் கொள்ளை போன்றவற்றால் ஏற்படும் சேதங்களுக்கு நிதிசார் பாதுகாப்பு ஏற்படுத்தப்படும்.

மோட்டார் வாகனக் காப்புறுதி

மேலதிக காப்புறுதிகள்

Additional Coverage

01 மோட்டார் வாகன விபத்துகள் காரணமாக வைத்தியசாலை அனுமதி மற்றும் நோயாளர் காவு வண்டி போன்றவற்றுக்கான காப்புறுதி (hospitalisation and ambulance cover)

02 பயணிகளுக்காக தனிநபர் திடீர் விபத்து அனுகூல காப்புறுதி (personal accident benefit for passengers)

03 சாரதிக்கு பணியாளர் நஷ்டஈடு காப்புறுதி (Workmen's Compensation Insurance (WCI) cover for driver)

04 100% எயார்பேக் காப்புறுதி (100% airbag cover)

05 வாகனத்தை இழுத்துச் செல்லும் செலவிற்கான காப்புறுதி (towing cover)

08 வாகனங்களின் உதிரிப்பாகங்கள் திருடப்படுவதற்கான காப்புறுதி (theft of parts cover)

மோட்டார் வாகன காப்புறுதி

01 வாகன உரிமையாளர் மற்றும் காப்புறுதி நிறுவனத்துக்கிடையிலான உடன்படிக்கையாகும்.

02 விபத்துகள் மற்றும் திருட்டு போன்றவற்றுக்காக காப்புறுதி செய்யப்பட்டுள்ள வாகனத்திற்கு அல்லது அந்த காப்புறுதி செய்யப்பட்ட வாகனத்தினால் மூன்றாம் தரப்பு நபர்களுக்கு/சொத்துகளுக்கு ஏற்படும் சேதங்களுக்கு நிதிசார் பாதுகாப்பை வழங்கும்.

03 வீதியில் பயணிக்கும் சகல வாகனத்திற்கும், மூன்றாம் தரப்புக்கு ஏற்படும் உயிரிழப்பு மற்றும் உடல்சார் காயங்களுக்கான காப்புறுதியொன்று கண்டிப்பாக இருக்க வேண்டும்.

04 மோட்டார் வாகன காப்புறுதியொன்றினூடாக பணிப் பகிஷ்கரிப்பு, கலவரங்கள், சிவில் அமைதியின்மை மற்றும் இயற்கை அனர்த்தங்கள் போன்றவற்றுக்கு காப்பீட்டை பெற்றுக் கொள்ள முடியும்.

மோட்டார் வாகன விபத்தொன்று நேர்ந்தால், நீங்கள் செய்ய வேண்டியது என்ன?

Things you should do after an Accident?

முதலில் விபத்து பற்றி பொலிசாருக்கு அறிவிக்க வேண்டும்.

அடுத்ததாக, விபத்து தொடர்பில் காப்புறுதி நிறுவனத்துக்கு அறிவிக்க வேண்டும். விபத்து பற்றி அறிவிப்பதற்காக உங்களுக்கு காப்புறுதி நிறுவனத்தின் 24 மணி நேரமும் செயற்படும் துரித அழைப்பு இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.

காப்புறுதி நிறுவனத்தின் பிரதிநிதியொருவர் விபத்து நேர்ந்த பகுதிக்கு சமூகமளிக்கும் வரை காத்திருக்க வேண்டும். மூன்றாம் தரப்பு சம்பந்தப்பட்டிருந்தால், அவர்களையும் காத்திருக்குமாறு கோர வேண்டும். விபத்தினால் வீதிப் போக்குவரத்து தடைப்பட்டிருந்தால், பொலிஸ் அதிகாரியின் அனுமதியுடன் வீதியிலிருந்து வாகனத்தை ஓரமாக்கவும். ஒருபோதும் வீதிப் போக்குவரத்தை தடைப்படுத்த வேண்டாம்.

காப்புறுதி நிறுவனத்தின் பிரதிநிதிக்கு விபத்து பற்றிய சரியான தகவல்களை வழங்கவும். மோட்டார் வாகன விபத்து உரிமைகோரல் பணம் வழங்குகையில் நீங்கள் வழங்கும் தகவல்கள் மிகவும் முக்கியமானவையாக அமைந்திருக்கும்.

இழப்பீட்டு கோரல் செயற்பாடு
(Claim Process)

1

இழப்பீட்டு படிவத்தை (Claim form) பூர்த்தி செய்து உங்களால் காப்புறுதி நிறுவனத்துக்கு சமர்பிக்க வேண்டும்.

2

வாகனத்திற்கான பழுதுபார்ப்பு விலைமதிப்பு (estimate) மற்றும் உதிரிப்பாகங்களுக்கான விலை பெறுமதி (Spare part quotation) ஆகியவற்றை நீங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

3

சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களின் அடிப்படையில் காப்புறுதி நிறுவனம் உரிமைகோரலை (Claim) அனுமதிக்கும். விலைமதிப்பாளர் (Assessor) கராஜ் பகுதியில் வாகனம் தொடர்பான மேலதிக பரிசோதனைகளை மேற்கொள்வார். விலைமதிப்பாளர் கராஜ் விலைமதிப்பை அனுமதித்த பின்னர் பழுதுபார்ப்பு செயற்பாடுகளை ஆரம்பிக்க முடியும்.

இழப்பீட்டு கோரல் செயற்பாடு
(Claim Process)

4

பழுதுபார்ப்பு பூர்த்தியடைந்ததன் பின்னர், இறுதிக் கட்டணப்பட்டியல் காப்புறுதி நிறுவனத்துக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். பழுதுபார்ப்பின் பின்னர் பரிசோதனைக்காக வாகனத்தை சமர்ப்பித்து, அகற்றிய சேதமடைந்த பகுதிகளை ஒப்படைக்கவும். சகல தேவைப்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் அனுமதியளிக்கப்பட்ட உரிமைத் தொகை செலுத்தப்படும்.

5

உரிமைத் தொகை செலுத்தப்படுவது காசோலை அல்லது வங்கிக் கணக்கொன்றில் வைப்புச் செய்யப்படுவது போன்ற முறையில் உங்களுக்கு வழங்கப்படும். காப்புறுதி பிரதிநிதி அல்லது காப்புறுதி நிறுவனத்தை தொடர்பு கொள்வதனூடாக உங்களுக்கு உரிமைகோரல் தொகையை பெற்றுக் கொள்ளவேண்டிய விருப்பமான முறையை தெரிவு செய்து கொள்ளலாம்.

மோட்டார் வாகன காப்புறுதி பற்றி நீங்கள் அறிந்திருக்க வேண்டிய முக்கியமான விடயங்கள்

வாகனப் பாவனை (Vehicle Usage)

STEP 01

தனிப்பட்ட பாவனை மற்றும் வணிக நோக்கு பாவனைக்காக வேறுபட்ட காப்புறுதிகள் காணப்படுகின்றன. நீங்கள் வாகனத்தினால் வருமானமீட்டுகின்றீர்களாயின் வணிக மோட்டார் காப்புறுதியை தெரிவு செய்ய வேண்டும்.

STEP 02

காப்புறுதியை தெரிவு செய்ததன் பின்னர் நீங்கள் வாகனத்தை பயன்படுத்த வேண்டியது அந்த காப்புறுதி பொருத்தமான பிரிவின் நோக்கத்திற்காக மட்டுமே.

STEP 03

நீங்கள் காப்புறுதி செய்த பிரிவைத் தவிர வேறு நோக்கத்திற்காக வாகனத்தை பயன்படுத்துவீர்களாயின், அவ்வாறான சந்தர்ப்பத்தில் உங்களின் உரிமைகோரல் நிராகரிக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளது.

சந்தைப் பெறுமதி
(Market Value)

- நீங்கள் எப்போதும் உங்களின் வாகனத்தின் சந்தைப் பெறுமதிக்கு காப்புறுதி செய்ய வேண்டும். உங்கள் வாகனத்தை குறைந்த பெறுமதிக்கு காப்புறுதி செய்திருந்தால் (Under Insurance), உரிமைகோரலின் போது உங்களுக்கு உரிய தொகை கிடைக்காமல் போவதற்கு வாய்ப்புள்ளது.

- காப்புறுதி செய்கையில் சரியான சந்தைப் பெறுமதியை அறிந்து கொள்வதற்கு, அங்கீகரிக்கப்பட்ட வாகன விலைமதிப்பீட்டாளரிடம் கோர முடியும்.

- மேலும், வாகனத்தின் சந்தைப் பெறுமதி எந்தளவு என்பதை உங்களின் காப்புறுதி பிரதிநிதி அல்லது காப்புறுதி நிறுவனத்திடமிருந்து அறிந்து கொள்ளலாம்.

நீங்கள் வாகனத்தை விற்கும் போது என்ன நடக்கும்?

What happens when you sell your vehicle

- வாகனத்தை விற்கும் சந்தர்ப்பத்தில் உங்களின் மோட்டார் வாகனக் காப்புறுதியை புதிய உரிமையாளருக்கு மாற்றிக் கொடுக்க முடியாது. வாகனத்தை விற்றதன் பின்னர் உங்கள் மோட்டர் வாகன காப்புறுதி செல்லுபடியற்றதாகும்.

- புதிய உரிமையாளர் (New Owner) வாகனத்துக்கான புதிய மோட்டார் வாகன காப்புறுதியொன்றை கொள்வனவு செய்ய வேண்டும். உங்களுக்கும் வேறொருவரின் மோட்டார் வாகன காப்புறுதியை பயன்படுத்த முடியாது.

உங்களால் செய்யக்கூடியது என்ன?

- உங்களுக்கு உங்களின் மோட்டார் வாகன காப்புறுதி செல்லுபடியற்றதாக்கி பயன்படுத்தாத காலப்பகுதிக்காக தவணைக் கொடுப்பனவை மீளக் கோர முடியும்.

- அல்லாவிடின், உங்களுக்கு குறித்த தவணையை பிரிதொரு காப்புறுதிக்கு மாற்றிக் கொள்ள முடியும்.

நன்றி

Safety isn't expensive, it's priceless.